பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்

**Pandian Tamil Journal of Temple Studies**
*A Peer-Reviewed Journal*

**Volume 6, Issue 1, November 2025** **E-ISSN: 2583-0880**

# Bhavani Sangameshwarar Temple Inscriptions and Performing Arts Sculptures

**Dr. C. Karthikeyan,** Assistant Professor, Department of Drama and Theatre Studies,
Tamil Nadu Open University, Chennai, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0007-5825-0765**
**DOI: 10.5281/zenodo.19533139**

## Abstract

*The evolution of performing arts in Tamil Nadu intertwines with religious places of worship. This paper examines the Bhavani Sangameswarar Temple for study. It is one of the seven sacred Shiva abodes of the Kongu region and serves as a unique confluence of architectural grandeur and artistic heritage of Tamil Nadu. The study analyses the dual existence of 'Classical' and 'Folk' dance forms as depicted in the sculptures of the temple with the help of field research and textual data. The pillars portray the 'Thandava' postures of Lord Shiva, which represent the classical tradition. They preserve rare folk depictions such as 'Pinnal Kolattam' (braided stick dance), 'Kumbi Kol Aadal', and 'Komali' (clown/buffoon) as well as grand structural temples. It highlights the cultural heritage of the Kongu region and its historical links with Chera traditions. The article concludes that the sculptures of the Sangameswarar Temple stand as evidence of historical heritage and affirms the development and preservation of Tamil performing arts over the ages. Hence, this study documents the artistic background of the temple by employing a descriptive methodology that focuses on its history, worship practices, and related aspects.*

**Keywords:** Bhavani Sangameswarar Temple, Performing Arts, Arts Sculpture, Folk Tradition, Kongu Region.

## References

[1] *Bhavani Thiruthala Varalaru*. Publication and Author: Pulavar A. Palaniappan, Bhavani, 2008.
[2] Mayilai Seeni. Venkatasamy. *Kongu Naattu Varalaru*. Naam Thamizhar Pathippagam, Triplicane, Chennai, First Edition - December 2008.
[3] Prof. Ki. Venkatachari. *Kongu Naattu Koilgal*. Palaniappa Brothers, Chennai, First Edition, 2011.
[4] *Kongu Kalanjiyam Volume – I*, (A – Kau). Meiyappan Pathippagam, Chidambaram, First Edition - December 2011.
[5] *Kongu Kalanjiyam Volume – II* (Sa – Sri). Meiyappan Pathippagam, Chidambaram, First Edition - December 2013.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Volume 6, Issue 1, November 2025 E-ISSN: 2583-0880

# பவானி சங்கமேஸ்வரர் திருக்கோயில் எழுத்துப்படைப்பும் நிகழ்கலைச் சிற்பங்களும்

**முனைவர் சி. கார்த்திகேயன்,** உதவிப் பேராசிரியர், நாடகம் மற்றும் அரங்கக்கலைத்துறை,
தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0007-5825-0765
DOI: 10.5281/zenodo.19533139

## ஆய்வுச் சுருக்கம்

*தமிழ் மண்ணின் நிகழ்த்துக் கலை வரலாறானது சமயம் மற்றும் வழிபாட்டுத் தலங்களை மையமாகக் கொண்டே வளர்ச்சி பெற்றுள்ளது. அவ்வகையில் கொங்கு நாட்டின் ஏழு சிவத்தலங்களில் ஒன்றான பவானி சங்கமேஸ்வரர் திருக்கோயில், கட்டடக்கலைச் சிறப்போடு கலைகளின் சங்கமமாகவும் திகழ்கிறது. இக்கட்டுரை, இக்கோயிலில் காணப்படும் சிற்ப ஆதாரங்களைக் கொண்டு, அக்கால நிகழ்த்துக் கலைகளின் செவ்வியல் மற்றும் நாட்டார் மரபுகளை ஆராய்கிறது. குறிப்பாக, இங்குள்ள மண்டபத் தூண்களில் செதுக்கப்பட்டுள்ள தாண்டவ மூர்த்திகளின் செவ்வியல் நிலைகளும், தமிழகக் கோயில்களில் அரிதாகக் காணப்படும் 'பின்னல் கோலாட்டம்', 'கும்பி கோல் ஆடல்' மற்றும் 'கோமாளி' சிற்பங்கள் போன்ற நாட்டார் கலை வடிவங்களும் விரிவாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. சேர மற்றும் சோழ நாட்டுக் கலைப் பண்பாடுகள் ஒருங்கே அமைந்த இக்கோயில் சிற்பங்கள், தமிழக நிகழ்த்துக் கலைகளின் பழம்பெருமையை உறுதிப்படுத்தும் வரலாற்று ஆவணங்களாகத் திகழ்வதை இக்கட்டுரையின் வழியாக அறியலாம். இந்த ஆய்வு கலைத் தொடர்புடைய பின்புலத்தினை வெளிக்காட்டும் விதமாகவும் பதிவுப்படுத்தும் முறையிலும் அமைந்துள்ளது. இது விளக்கமுறை ஆய்வாக அமைகிறது. எனவே, இந்த ஆய்வுக்கட்டுரை இக்கோயிலுடன் தொடர்புடைய வரலாறு, வழிபாடு முதலியவற்றை வெளிக்கொணர்வதாக உள்ளது.*

**குறிப்புச் சொற்கள்:** பவானி சங்கமேஸ்வரர் கோயில், நிகழ்த்துக் கலைகள், நிகழ்கலைச் சிற்பம், நாட்டார் மரபு, கொங்கு நாடு.

## அறிமுகம்

பவானி சங்கமேஸ்வரர் திருக்கோயில் பெருஞ்சிறப்பும் தனித்துவமும் மிக்கது. இக்கோயிலைக் கொங்கு நாட்டுச் சிற்றரசர்களான கெட்டிமுதலியார் பரம்பரையினர் புதுப்பித்துக் கட்டியுள்ளனர். கொங்கு 24 நாடுகளுள் ஒன்றான பூவானி நாட்டின் ஒரு பகுதியாகப் பவானி அமைந்துள்ளது. "பூவானி நாட்டின் பெயரே பவானி என்று மருவியது" எனப் புலவர் குழந்தை குறிப்பிடுகிறார். திருஞானசம்பந்தரால் தேவாரப் பாடல் பெற்ற கொங்கு ஏழு சிவத்தலங்களில் இதுவும் ஒன்றாகும். சம்பந்தர் பவானிக்கு வந்து,

**மந்தம் முழவம் இயம்ப மந்தி கூத்தாட**
**வார்பொழில் வண்டுபாடச் செந்தேன்**
**தெளியொளிரத் தேமாங்கனி உதிர்க்கும்**
**திருநணாவே…**

எனத் தொடங்கும் 'திருநணா' பதிகத்தை அருளிச் செய்த பின்னரே திருச்செங்கோட்டிற்குச் சென்றுள்ளார். (கொங்கு களஞ்சியம், தொகுதி-2, ப. 379, 2011) சம்பந்தர் தேவாரம் பாடிய காலத்தில் இவ்வூருக்கு 'நணா' என்ற பெயர் வழங்கியது.

Volume 6, Issue 1, November 2025 E-ISSN: 2583-0880

காவிரி, பவானி மற்றும் அமுத நதி ஆகிய மூன்று ஆறுகள் கூடும் 'முக்கூடல்' (கூடுதுறை) பகுதியில் ஈசன் எழுந்தருளியுள்ளதால் அவர் 'சங்கமேஸ்வரர்' என்று அழைக்கப்படுகிறார். அமுத நதி என்பது கோயிலிலிருந்து பவானி ஆற்றில் கலப்பதாகவும், பத்மாசுரன் எனும் அரக்கனிடம் இருந்து தப்பிக்கத் தேவர்கள் சிவனிடம் அடைக்கலம் பெற்ற இடமாகவும் நம்பப்படுகிறது. இறந்தவர்களின் அஸ்தியை இங்குள்ள கூடுதுறையில் கரைப்பது காசிக்கு நிகரான புண்ணியமாகக் கருதப்படுகிறது. இக்கோயிலில் சங்கமேஸ்வரர், வேதநாயகி, ஆதிகேசவப் பெருமாள், சௌந்தரவல்லித் தாயார் முதலான தெய்வங்கள் எழுந்தருளியுள்ளனர். "சைவர்களுக்கும் வைணவர்களுக்கும் இது சிறந்த தலமாக விளங்குகிறது" (புலவர் அ. பழனியப்பன், பவானித் திருத்தல வரலாறு, ப.2, 2008). ஒவ்வொரு தெய்வத்திற்கும் தனித்தனி கோயில்களும் கருவறைகளும் அமைந்துள்ளன. வேதநாயகியின் சன்னதி கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. சிவனுக்கும் பார்வதிக்கும் நடுவில் முருகன் சன்னதி அமைந்திருப்பது இக்கோயிலின் சிறப்பம்சமாகும். அருணகிரிநாதர் பவானிக்கு வந்து முருகனை, "சிலைவேடர் சேவற்கொடியேனே திருவானி கூடற்பெருமாளே" என்று புகழ்ந்து பாடியுள்ளார்.

**தனிச்சிறப்புகள்**

18-ஆம் நூற்றாண்டில் கோயம்புத்தூர் ஆட்சியராக இருந்த ஆங்கிலேயர் வில்லியம் கேரோ, அம்மன் மீது கொண்ட பக்தியால் ஒரு 'தந்தக்கட்டிலை' காணிக்கையாக வழங்கியுள்ளார். இக்கட்டில் பூ வேலைப்பாடுகள் நிறைந்த கலைப் பெட்டகமாகும். வில்லியம் கேரோ அம்மன் பக்தராக மாறியதற்குக் காரணமாக ஒரு கதை சொல்லப்படுகிறது: ஒருமுறை வில்லியம் கேரோ தங்கியிருந்த கட்டடம் இடிந்து விழப் பார்த்தபோது, ஒரு சிறுமி அவரை வெளியே அழைத்துச் சென்று காப்பாற்றியதாகவும், அச்சிறுமி வேதநாயகி அம்மனே என்றும் அவர் போற்றி வணங்கியுள்ளார். ஆடிப்பெருக்கு மற்றும் சித்திரைத் திருவிழா ஆகியன இங்கு மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றன.

**திருக்கோயில் கட்டமைப்பு**

பவானி சிவன் கோயில் கோபுரங்கள் மற்றும் விமானங்களின் அமைப்பு தென்னகத் திராவிடக் கட்டடக்கலைப் பாணியைப் பின்பற்றி மிக உயரமாக, அடுக்கு நிலைகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. கோயிலின் வெளிச்சுவர்களில் உள்ள மாடக்குழிகள் மற்றும் அவற்றில் வீற்றிருக்கும் தெய்வச் சிலைகள் செதுக்கப்பட்ட விதம் தனித்துவம் வாய்ந்தது. சங்கமேஸ்வரர் சன்னதி மண்டபத் தூண்களில் தசாவதாரக் காட்சிகள், சிவபெருமானின் பல்வேறு கோலங்கள் மற்றும் புராணக் கதைகள் தத்ரூபமாகச் செதுக்கப்பட்டுள்ளன. சிலைகளில் உள்ள நளினம், உடலமைப்பு மற்றும் முக பாவனைகள் தத்ரூபமாக அமைந்துள்ளன. குறிப்பாக, 'கும்பி கோல் ஆடலில்' இடம்பெறும் சிலைகளின் அணிகலன்கள் கூட மிகத் தெளிவாகச் செதுக்கப்பட்டுள்ளன. (கள ஆய்வு நாள்: 03.08.25)

அம்மன் சன்னதியில் உள்ள தூண்களில் பெண் தெய்வங்களின் சிற்பங்கள் மற்றும் மலர் வேலைப்பாடுகள் மென்மை மிளிரும்படி செதுக்கப்பட்டுள்ளன. சிவனார் சன்னதியில் இருக்கும் கம்பீரமான தாண்டவ நிலைக்கு மாறாக, இங்கு மென்மையான கலை உணர்வைத் தரும் 'லாசிய' நிலையில் சிற்பங்கள் அமைந்துள்ளன. இது சிவ-பார்வதி நாட்டியத்தில் காணப்படும் தாண்டவ-லாசிய நிலைகளை உணர்த்துகிறது. கோயில் சுவர்களில் காணப்படும் கல்வெட்டுகள் திருப்பணிகள் மற்றும் இறைவனுக்கு வழங்கப்பட்ட கொடைகளைப் பற்றி விவரிக்கின்றன. கிழக்குப் புறச்சுவர் ஓரம் ஆற்றின் நீர் மோதிச் செல்லும் அழகினைக் காணும்போது மனச் சிக்கல்கள் நீங்கும். இத்திருக்கோயில் கட்டமைப்பில் நான்கு வாயில்கள் அமைந்துள்ளன; வடக்கு வாயிலில் இராஜகோபுரம் அமைந்துள்ளது. இது ஐந்து நிலைக் கோபுரமாகும். இக்கோபுரம் மிக உயரமானதும், அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய

சுதையிலான சிற்பங்களையும் கொண்டது. இதில் நின்றாடும் ஐந்து தாண்டவ மூர்த்திகளின் சிற்பங்கள் நாட்டியக் கரணங்களை உயிரோட்டமாகக் காட்டுகின்றன. "கோயிலின் தென்புற மதில்சுவர் பழமையான கோட்டைச் சுவராகும். இக்கோயிலைச் சுற்றி ஒரு கோட்டை இருந்ததற்கான சின்னங்கள் ஆங்காங்கே இன்றும் காணப்படுகின்றன" (புலவர் அ. பழனியப்பன், பவானித் திருத்தல வரலாறு, ப.5, 2008).

அம்மன் கோயிலில் உள்ள அர்த்த மண்டபம், மகா மண்டபம் மற்றும் சிற்ப மண்டபம் ஆகியவற்றில் ஆடல் சிலைகள் அமைந்துள்ளன. அர்த்த மண்டபத்தின் முன்புறம் வலப்பக்கம் விநாயகரும், இடப்பக்கம் நாகரும் உள்ளனர். முன்பக்கத்தில் உள்ள சிற்ப மண்டபம் பதினெட்டுத் தூண்களைக் கொண்டது. இம்மண்டபத்தில் கெட்டி முதலியார் காலத்தில் செதுக்கப்பட்ட அற்புதமான தூண்கள் உள்ளன.

யாளியோடு போரிடும் குதிரை வீரர்கள், சிறுத்தையோடு போரிடும் குதிரை வீரர்கள் போன்ற சிற்பத் தூண்கள் சிறப்புமிக்கவை.

> **இங்குள்ள சிரிக்கும் சிலை 'கல் விரிக்கும் கலை' எனப் போற்றப்படுகிறது. 'சிரிக்கும் பாவை' என்னும் பெண்ணின் சிற்பம் விநோதமான ஒன்றாகும். இதன் உதடுகளில் நீர் ஊற்றினால் உடனே அதன் முகத்தில் புன்னகை மலர்கிறது. இப்புன்னகை புகழ்பெற்ற இத்தாலிய ஓவியரான லியோனார்டோ டாவின்சி தீட்டிய மோனலிசாவின் புன்னகையையும் மிஞ்சுவதாகும். (பேரா. கி. வெங்கடாச்சாரி, கொங்கு நாட்டுக் கோயில்கள், ப.33, 2011)**

தூண்களில் கெட்டி முதலியாரின் சிற்பமும், அவரது மனைவி சின்னம்மையின் சிற்பமும் அழகுற அமைந்துள்ளன. மேலும், இம்மண்டப விதானத்தில் உள்ள தாமரை மலரில் கிளிகள், கெட்டி முதலியாரின் சின்னமான வண்ணத் தடுக்கு, வாடாமாலை, நடன மங்கைகள் மற்றும் 'பின்னல் கோலாட்டக்' காட்சிகள் ஆகியன கொங்கு கோயில்களில் இல்லாத தனிச்சிறப்பாகும். இங்குச் சங்கமேஸ்வரர் லிங்க வடிவமாக உள்ளார். மகா மண்டபத்தில் திருஞானசம்பந்தர் பாடுவது போன்ற சிற்பம் கம்பீரமாகக் காட்சி அளிக்கிறது.

**எழுத்துப்படைப்புகள்**

> **"பவானிக் கோயிலில் பல திருப்பணிகளைச் செய்த கெட்டி முதலியின் மனைவி சின்னம்மை தமிழ்ப் புலமை பெற்றவராக விளங்கியுள்ளார். இவர், பூங்கோதை என்னும் புலவருடன் இணைந்து 'கண்ணொளி கதிரொளி' என்னும் இறை நடனம் பற்றிய நூலை இயற்றியுள்ளார். தக்கை இசையில் பாடப்பட்ட 'தக்கை இராமாயணத்தை' இயற்றியவர் எம்பெருமான் கவிராயர்" (புலவர் அ. பழனியப்பன், பவானித் திருத்தல வரலாறு, ப.10, 2008).**

இவரது மனைவி பூங்கோதை. கெட்டி முதலியார் கோயில் திருப்பணி செய்தபோது புலவர் பூங்கோதை கோயில் அதிகாரியாகப் பணியாற்றியுள்ளார் எனச் செப்பேடு குறிப்பிடுகிறது. இவரைக் 'கொங்கு மண்டலச் சதகம்' என்னும் நூல் சிறப்பித்துக் கூறுகிறது. பவானி திருக்கோயில் பற்றிப் பல நூல்கள் இயற்றப்பட்டுள்ளன.

> **பவாநி கூடற்புராணம் மகாவித்துவான் வாசுதேவ முதலியார் எழுதியதாகும். இந்நூலுக்குப் புலவர் கு. குமாரசாமி பிள்ளை, 'கூடற்புராண வசனம்' என்னும் தலைப்பில் உரை எழுதி 1925-இல் வெளியிட்டுள்ளார். சங்கமேஸ்வரரைப் போற்றி 'பவாநிப் பதிற்றுப் பத்தந்தாதி' என்னும் நூலை 1924-இல் வெளியிட்டுள்ளார். 'வேதநாயகியம்மை பிள்ளைத்தமிழ்' என்னும் நூலை திருமுகவூர் மு.ரா. கந்தசாமிக் கவிராயர் இயற்றியுள்ளார்." (மேலது நூல், பக். 10-11)**

Volume 6, Issue 1, November 2025 E-ISSN: 2583-0880

மேலும், 'வேதநாயகியம்மை பிள்ளைத்தமிழ்', 'பவாநிப் பதிற்றுப்பத்தந்தாதி' ஆகிய நூல்களுக்குப் புலவர் அ. பழனியப்பன் உரை வெளியிட்டுள்ளார். பவானியைச் சார்ந்த பாலபாரதி முத்தையர் 'விறலிவிடு தூது' என்னும் நூலை இயற்றியுள்ளார். 'வேதநாயகியம்மை பதிகம்', 'வேதநாயகி ஆற்றுப்படை' ஆகிய நூல்கள் வித்துவான் தெய்வசிகாமணிக் கவுண்டரால் இயற்றப்பட்டுள்ளன. புலவர் குழந்தை 'திருநணாச் சிலேடை வெண்பா' என்னும் நூலை 1958-இல் வெளியிட்டுள்ளார். இந்நூல்கள் அனைத்தும் தற்போது மறுபதிப்பு இன்றிச் சந்தைகளில் கிடைப்பது அரிதாக உள்ளது.

**நிகழ்கலைச் சிற்பங்கள்**

கோயில் சிற்பக் கலையில் நிகழ்த்துகலை பதிவுகள் நிறைந்துள்ளன. நடராஜர் திருமேனி மூலவர் சன்னதிக்கு அருகில் தெற்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. ஆனித் திருமஞ்சனம் மற்றும் மார்கழி ஆருத்ரா தரிசனம் போன்ற விழாக்கள் இங்குச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. கற்சிற்பங்கள் வழியாக வெளிப்படும் நிகழ்கலை மரபானது பவானி சிவன் கோயிலில் தனிச்சிறப்பாக விளங்குகின்றது. எட்டுத் திருக்கரங்களுடன் கூடிய இரண்டு 'ஊர்த்த தாண்டவ' மூர்த்திகள் அழகிய நிலையில் தூண் புடைப்புச் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. அதேபோல, ஆறு கைகளுடன் வலது காலைத் தூக்கி ஆடும் நிலையில் நடராஜர் சிற்பம் மூலவர் கோயில் சுவரில் அமைந்துள்ளது. மேலும், நடனத்திற்குத் தாளம் இசைக்கும் நந்தி தேவர் சிலையும், 'கிடைக்கை' (உடுக்கையின் பெரு வடிவம்) வாசிக்கும் திருமால் சிலையும் மகா மண்டபத்தில் வடிக்கப்பட்டுள்ளன. மண்டபத் தூண்களில் நான்கு கோமாளிகளின் சிற்பங்கள் நிகழ்த்தல் மொழி வெளிப்படும்படி அமைந்துள்ளன. இக்கோமாளிகள் தமிழகக் கூத்து மற்றும் குறவஞ்சி நாடகங்களில் இடம்பெறும் 'கட்டியக்காரன்' மற்றும் சமஸ்கிருத நாடகங்களில் வரும் 'விதூஷகன்' போன்ற கதை மாந்தர்களின் அமைப்பை ஒத்திருக்கிறார்கள். இதில் நின்ற நிலையில் மூன்று கோமாளிகளும், அமர்ந்த நிலையில் ஒரு கோமாளியும் உள்ளனர். மேலும், தப்பு இசைக்கு ஆடும் போர்வீரன், மிருதங்க இசைக்கு ஆடும் கலைஞன் எனப் பல சிலைகள் தனிச்சிறப்புடன் அமைந்துள்ளன.

மூலவர் மற்றும் அம்மன் சன்னதி மண்டப மேற்கூரையின் அடிப்பகுதியில் 'பின்னல் கோலாட்டம்' ஆடும் பெண் கலைஞர்களின் புடைப்புச் சிற்பங்கள் சிறப்பாக அமைந்துள்ளன. இதுவே பவானிக் கோயிலின் தனிச்சிறப்பாகும். அமர்ந்து மண்டியிட்டு ஆடும் நிலைகள், நின்று சுழன்றாடும் நிலைகள் என இச்சிற்பங்கள் அழகுடன் விளங்குகின்றன. இவை பழமையான பெருங்கோயில்களில் காணக் கிடைக்காத அரிய கலைப் பதிவுகளாகும். தற்காலத்தில் கொங்குப் பகுதியில் ஆடப்படும் 'வள்ளி கும்மி' மற்றும் 'கோல் கும்மி' ஆகிய ஆடல்களின் மூல வடிவமாக இவை இருக்க வாய்ப்புள்ளது. பொதுவாகப் பெருங்கோயில்களில் செவ்வியல் ஆடல்களே நிறைந்திருக்கும், ஆனால் இங்கு நாட்டார் வடிவ ஆடல் சிற்பங்கள் மண்டபம் முழுவதும் இருப்பது கொங்குப் பகுதியில் 'பின்னல் கோலாட்டம்' பெற்றிருந்த சிறப்பினை உணர்த்துகிறது.

சேர நாடாகிய கேரள மண்ணில் தற்போது இது போன்ற பல கோலாட்டங்கள் பெண்களால் ஆடப்படுகின்றன. பவானியும் பண்டைய சேர மண்ணின் ஒரு பகுதியாக விளங்குவதால், இரு மாநிலக் கலை வடிவங்களின் மூலப் பதிவாக இக்கோயில் அமைகிறது. மேலும், ஒப்பனை செய்யும் பெண் கலைஞர் மற்றும் குறவன்-குறத்தி நடனச் சிலைகள் தற்காலக் கலை வடிவங்களுடன் ஒப்பாய்வு செய்வதற்கான சிறந்த ஆவணத் தரவுகளாகும்.

**ஆய்வு முடிவு**

மேற்கண்ட ஆதாரங்களின் அடிப்படையில் பார்க்கும்போது, தமிழ் மண்ணின் நிகழ்த்தல் மரபானது சமயம் மற்றும் வழிபாட்டுத் தலங்களை மையமாக வைத்தே வளர்ந்துள்ளது என்பது

தெளிவாகிறது. தமிழகத்தின் நிகழ்த்துக் கலை மரபு சங்க காலம் தொட்டே நீண்ட வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது. கோயில்கள் வழிபாட்டுத் தலங்களாக மட்டுமன்றி, சமூகப் பண்பாட்டு மையங்களாகவும் திகழ்ந்தன. குறிப்பாக, வழிபாட்டுச் சடங்குகளின் ஒரு பகுதியாக ஆடல், பாடல் மற்றும் இசை உள்ளிட்ட நிகழ்த்துக் கலைகள் போற்றப்பட்டன. நாட்டார் தெய்வ வழிபாடுகளில் காணப்படும் உணர்ச்சிப்பூர்வமான ஆட்டங்களும், ஆகம விதிகளுக்கு உட்பட்ட பெருங்கோயில் கலைகளும் ஒன்றோடொன்று பிணைந்து வளர்ந்தன என்பதற்குப் பவானி திருக்கோயில் சிறந்த சான்றாகும். இக்கோயிலின் கட்டடக்கலை மற்றும் சிற்பங்களை ஆய்வு செய்யும்போது, அக்கால நிகழ்கலை வடிவங்கள் எத்தகைய உன்னத நிலையில் இருந்தன என்பதை உறுதிப்படுத்த முடிகிறது. இக்கோயிலின் தனிச்சிறப்பு என்பது, நாட்டார் ஆடல் மற்றும் செவ்வியல் தாண்டவம் ஆகிய இரண்டு நிலைகளும் இங்கு ஒருங்கே அமையப் பெற்றிருப்பதுதான். நாட்டார் ஆடல்கள் மக்களின் வாழ்வியலோடும் சடங்குகளோடும் தொடர்புடையவை; செவ்வியல் தாண்டவம் இலக்கண விதிகளுக்கு உட்பட்டது. இந்த இரண்டு மரபுகளையும் ஒருசேரப் போற்றி வளர்த்துள்ளதை இக்கட்டுரை உறுதிப்படுத்துகின்றது.

**படங்கள்**



**குறிப்புகள்**

[1] *பவானித் திருத்தல வரலாறு*. வெளியீடு (ம) ஆசிரியர்: புலவர் அ.பழனியப்பன், பவானி, முதல் பதிப்பு, 2008.
[2] மயிலை. சீனி. வெங்கடசாமி. *கொங்கு நாட்டு வரலாறு*. நாம் தமிழர் பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை, முதல் பதிப்பு - 2008, டிசம்பர்.
[3] பேரா. கி. வெங்கடாச்சாரி. *கொங்கு நாட்டுக் கோயில்கள்*. பழனியப்பா பிரதர்ஸ், சென்னை. முதல் பதிப்பு, 2011.
[4] *கொங்கு களஞ்சியம் தொகுதி –I*, ( அ – கௌ), மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், முதல் பதிப்பு 2011, டிசம்பர்.
[5] *கொங்கு களஞ்சியம் தொகுதி –II* (ச – ஶ்ரீ), மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், முதல் பதிப்பு, 2013, டிசம்பர்.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.